# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 04.09.2019

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2369/B/2018**

திருமதி.கி.அருள்மொழி — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவிடைமருதூர்,
தஞ்சாவூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வாணையத்தால் இன்று (04.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திருமதி.கி.அருள்மொழி அவர்கள் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர், திரு.சு.பாக்யராஜ், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (பொறுப்பு) திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம், அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 01.12.2017 தேதியிட்ட மனுவில், திருவிடைமருதூர் வட்டம், கஞ்சனூர் மேல அக்கரகாரத்தை சேர்ந்த திருமதி.D.சாந்தா கடந்த 15.10.2015ம் தேதி காலமாகிவிட்டார். மேற்படி நபரின் இறப்பு சான்றிதழ் சான்றொப்பமிட்ட நகல் மற்றும் வாரிசு சான்றிதழ் நகல் கேட்டும், வாரிசு சான்றிதழ் ஏதும் வழங்கப்படவில்லை என்றால் அதன் விபரம் மற்றும் அது தொடர்பாக 6 இனங்களில் தகவல் கேட்டு திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் 29.12.2017 தேதியிட்ட கடிதத்தில், மனுதாரருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

3. அதில் திருப்தியடையாத மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை முழுமையாக பெற்றுத் தருமாறும் தெரிவித்து 22.01.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு

19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுலவக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 28.03.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (04.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு உரிய தகவலினை இன்றைய விசாரணையின்போது நேரில் சார்வு செய்ய கொண்டு வந்திருப்பதாக தெரிவித்து அதனை ஆணையத்தின் முன்பு மனுதாரருக்கு சார்வு செய்தார்.

5. இன்றைய விசாரணையின் ஆஜரான மனுதாரர், தனக்கு வழங்கப்பட்ட தகவல் திருப்திகரமாக இல்லை என்றும், தனது மாமியாரின் இறப்பு சான்றிதழில் D.சாந்தா என்பதற்கு பதிலாக தி.சாந்தா என்று பதிவு செய்யப்பட்டு இருப்பதாகவும், மேலும் தனது மாமியாரின் வாரிசு சான்றிதழில் தனது கணவர் இறந்து விட்டதாலும், அதில் தனது பெயரை சேர்க்க வேண்டும் என்றும் வாதத்தின்போது தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் D.சாந்தா என்பவர் இறந்ததாக தெரிவித்து பெறப்பட்ட வாரிசு சான்றிதழில் மனுதாரரின் கணவர் செல்வம் என்பவர் இறந்து விட்டதால் அவரது மகன் மற்றும் மகள் பெயர் வாரிசுகளாக சேர்த்திருப்பதாக தெரிவித்தார். மேற்படி வாரிசு சான்றிதழில் மனுதாரரின் பெயரை சேர்க்க தனக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்தார்.

6. மேற்காணும் சூழ்நிலையில் இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் வழங்கப்படுகின்றன:-

1. மனுதாரரின் 01.12.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனு, பொதுத் தகவல் அலுவலர் திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகம் கொடுத்த 29.12.2017 தேதியிட்ட தகவலின் நகல் மற்றும் இறந்துபோன திருமதி.சாந்தா என்பவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவை கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மனுதாரரின் 01.12.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக, **கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர்** திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்து, மனுதாரர் கோரியுள்ள தகவல் அடங்கிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(3)(b)ன்கீழ் ஆய்வுசெய்து, திருவிடைமருதூர் வட்டாட்சியர், பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நடைபெறும் மறுவிசாரணையன்று நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க **கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர்** அவர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.
2. வழக்கின் மறுவிசாரணை பிறிதொரு தேதிக்கு மாற்றி வைக்கப்படுகிறது. நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

3. அன்றைய தின விசாரணைக்கு கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் மற்றும் திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர் தவறாமல் ஆஜராக ஆணையம் உத்திரவிடுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2369/B/2018</u>**

**<u>பெறுநர்</u>**

வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்,

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்,

வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவிடைமருதூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்,

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவிடைமருதூர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

திருமதி.கி.அருள்மொழி,
க/பெ.தி.செல்வம்,
1069, மனுநீதி சோழன் நகர்,
ஸ்ரீநகர் காலனி (கிழக்கு)
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம் - 612 001

Copy to: File / Stock File
DS/PC 04.09.2019